கடித எண். 38561/எம்/2008-3
பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் (எம்) துறை
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009,
நாள் 16-11-2009
ஐப்பசி 30,
திருவள்ளுவர் ஆண்டு 2040

அனுப்புநர்
திரு. கே.என். வெங்கட்ரமணன், இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம்,
4வது தளம், ஈ.வெ.கி. சம்பத் மாளிகை,
கல்லூரி சாலை,
சென்னை - 6.

அய்யா,

பொருள்: பொதுப்பணிகள் – இணை நிர்ணயக் கல்வி பரிசீலிப்புக்குழு – கல்வித்தகுதிகள் பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் இளம் அறிவியல் (உயிரின வேதியியல்) B.Sc., (Bio-Chemistry) பட்டப்படிப்பினை இளம் அறிவியல் (வேதியியல்) B.Sc., (Chemistry) பட்டப்படிப்பிற்கு இணையாக கருதி பொதுப் பணிகளில் வேலைவாய்ப்பிற்காக பரிந்துரைக்க இயலாது – ஆணை வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண். 254, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (ஆர்) துறை நாள் 22.10.1998.
2. தங்கள் கடித எண். 2631/ஆ2/2008 நாள் 16.07.2008.
3. அரசுக் கடித எண். 38561/2008-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்(எம்)துறை நாள் 17.10.2008 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு முகவரியிடப்பட்டது.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரின் கடித எண். 2681/வி.ம.அ.து.ஊ1/2009 நாள் 20.08.2009.

*****

பார்வை ஒன்றில் கண்டுள்ள அரசாணையில், பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் இளம் அறிவியல் (உயிரின வேதியியல்) B.Sc., (Bio-Chemistry) பட்டப்படிப்புக்கு இணையாக குறிப்பிட்டுள்ள இளம் அறிவியல் (வேதியியல்) B.Sc., (Chemistry) பட்டப்படிப்புக்கு சமமாகக் கருதிப் பொதுப்பணிகளில் பணி நியமனம் பெறும் பொருட்டு அங்கீகாரம் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

த.பி.பா.

2. பார்வை 2-ல் கண்டுள்ள கடிதத்தில், ஆசிரியர் தேர்வு வாரியத்தில், பட்டதாரி ஆசிரியர்களை ஆண்டுதோறும் தெரிவு செய்யும்போது, வேதியியல் (Chemistry) பாடத்திற்குத் தெரிவு செய்யும் பணி நாடுநர்கள், உயிரின வேதியியல் (Bio-Chemistry) பட்டம் பெற்றவர்களாக சிலர் உள்ளனர் என்றும், இவ்வாறு இளம் அறிவியல் (உயிரின வேதியியல்) B.Sc., (Bio-Chemistry) பட்டம் பெற்றவர்களை வேதியியல் (Chemistry) பட்டதாரி ஆசிரியராகத் தெரிவு செய்யலாமா என்பதற்கு விளக்கம் அளிக்குமாறு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பார்வை மூன்றில் கண்டுள்ள அரசுக் கடிதத்தில், பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இம்மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் இளம் அறிவியல் (உயிரின வேதியியல்) B.Sc., (Bio-Chemistry) பட்டப்படிப்பினை, இளம் அறிவியல் (வேதியியல்) B.Sc., (Chemistry)-க்கு சமமாகக் கருதி, பொதுப்பணிகளில் பணி நியமனம் பெறும் பொருட்டு, இணை நிர்ணயக் கல்வி பரிசீலிப்புக்குழு கூட்டத்தின் (Equivalence Committee) பரிந்துரையினை பெறுவதற்காக தேர்வாணையத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

4. பார்வை நான்கில் கண்டுள்ள கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் 10.08.2009 அன்று நடந்த இணை நிர்ணயக் கல்வி பரிசீலிப்புக் குழுக்கூட்டத்தில், பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் இளம் அறிவியல் (உயிரின வேதியியல்) B.Sc.,(Bio-Chemistry) பட்டப்படிப்பினை, இளம் அறிவியல் (வேதியியல்) B.Sc., (Chemistry) பட்டப்படிப்பிற்கு இணையாகக் கருதி, பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பிற்காக பரிந்துரைக்க இயலாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

5. மேற்கண்ட குழுவின் பரிந்துரையினை நன்கு பரிசீலித்தப்பின், அரசு அதனை ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. அவ்வாறே, பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இம்மாநிலத்திலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களால் வழங்கப்படும் இளம் அறிவியல் (உயிரின வேதியியல்) B.Sc.,(Bio-Chemistry) பட்டப்படிப்பினை, இளம் அறிவியல் (வேதியியல்) B.Sc., (Chemistry) பட்டப்படிப்பிற்கு இணையாகக் கருதி பொதுப்பணிகளில் வேலை வாய்ப்பிற்காக அங்கீகாரம் அளிக்க முடியாது என அரசு ஆணையிடுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

17/11/09

அரசுச் செயலாளருக்காக

17.11.09

நகல்

செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை – 2
அனைத்து செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை – 9
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை– 9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அனைத்துப் பிரிவுகள்,
சென்னை – 9.
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (மின்சாரம்), சென்னை – 9.
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (உயர்கல்வி), சென்னை – 9.
தனிச் செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
ப.ம.நி.சீ (நி.சீ.II) பிரிவு.
இ.கோ./ உ.ந.